நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

**NSW Federation of Tamil Schools Inc.**

# 2020

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

### தரம்: இடைநிலை கீழ்ப் பிரிவு (ஆண்டு 5, 6)

**Level : Intermediate Lower (Year 5 & 6)**

**வழங்கப்படும் நேரம் : 75 நிமிடங்கள்**

Time Given : 75 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**

**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

November 2020

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளடியிடுக.**

(10 x 2 = 20)

1. ஆறுமுக நாவலர் பிறந்த இடம்

(அ) சென்னை (ஆ) மட்டக்களப்பு

(இ) யாழ்ப்பாணம் (ஈ) சிட்னி

2. ''என் சரித்திரம்'' என்ற தலைப்பில் சுயசரிதையை எழுதிய அறிஞர்

(அ) ஆறுமுக நாவலர் (ஆ) மறைமலையடிகள்

(இ) உ.வே.சாமிநாதையர் (ஈ) திருவள்ளுவர்

3. உ.வே.சாமிநாதையரின் வரலாறு எப்பெயரிற் தொலைக்காட்சித் தொடராக வெளி வந்தது

(அ) தங்கத் தாத்தா (ஆ) தமிழ்த் தாத்தா

(இ) நல்ல தாத்தா (ஈ) எங்கள் தாத்தா

4. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று கணியன் பூங்குன்றன் பாடிய பாடல் இடம்பெற்ற நூல்

(அ) புறநானூறு (ஆ) ஆத்திசூடி

(இ) திருக்குறள் (ஈ) நளவெண்பா

5. இயற்கை அழிவு எனக் கூறமுடியாதது

(அ) காட்டுத் தீ (ஆ) வெள்ளப் பெருக்கு

(இ) வறட்சி (ஈ) அணு ஆயுதப் பரிசோதனை

6. ஒரு குடும்பத்தின் மையமாக விளங்குபவர்கள்

(அ) உறவினர் (ஆ) தாயும் தந்தையும்

(இ) மாமாவும் மாமியும் (ஈ) நண்பர்கள்

7. துன்பமான நிகழ்வுகளில் ஒன்று

(அ) பிறப்பு (ஆ) திருமணம்

(இ) இறப்பு (ஈ) புதுமனை புகுதல்

8. சுபகாரியங்களில் ஒன்று

(அ) இறப்பு (ஆ) திருமணம்

(இ) நோய்வாய்ப்படுதல் (ஈ) அனர்த்தங்களால் இடம்பெயர்தல்

9. பல குடும்பங்கள் ஒன்று சேர்வதால் உருவாகுவது

(அ) சமூகம் (ஆ) திருமணம்

(இ) சிறப்பு (ஈ) கௌரவம்

10. தமிழ் குடும்பங்களின் அதி உன்னத பண்புகள் என எவற்றைக் குறிப்பிடலாம்?

(அ) பெற்றோரை நேசித்தல் (ஆ) பெரியோரைக் கனம் பண்ணுதல்

(இ) வந்தோரை வரவேற்று உபசரித்தல் (ஈ) அ,ஆ,இ வில் கூறப்பட்ட அனைத்து பண்புகளும்

**கீழ்வரும் வினாக்களுக்குத் தகுந்த எதிர்ச் சொற்களை தெரிவுசெய்க.**

(5 x 2 = 10)

| | |
|---|---|
| 11. நன்மை | அ. எடு |
| 12. வெற்றி | ஆ. பகைவன் |
| 13. நண்பன் | இ. தோல்வி |
| 14. இறங்கு | ஈ. தீமை |
| 15. கொடு | உ. ஏறு |

**கீழ்வரும் தமிழ்ச் சொல்லுக்கு உரிய ஆங்கிலச் சொல்லை தெரிவுசெய்க.**

(4 x 2 = 8)

| | |
|---|---|
| 16. குடும்பம் | அ. Fear |
| 17. பயம் | ஆ. Interest |
| 18. ஆர்வம் | இ. Arts |
| 19. கலைகள் | ஈ. Family |

**பின்வரும் தொடர்களிற் சரியானதை “சரி” எனவும் பிழையானதை “பிழை” எனவும் புள்ளடியிடுக.**

(3 x 2 = 6)

20. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தமிழரின் சிற்பக்கலைக்கு ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

(அ) சரி (ஆ) பிழை

21. தமிழ் நாட்டில் அன்னை வேளாங்கண்ணி தேவாலயம் போல ஈழத்தில் மடுமாதா தேவாலயம் புகழ் பெற்றது.

(அ) சரி (ஆ) பிழை

22. சி.வி.இராமன் “இராமன் விளை”வை கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசைப் பெற்றார்.

(அ) சரி (ஆ) பிழை

**கொடுக்கப்பட்டுள்ள படத்திற்குப் பொருத்தமான நிகழ்ச்சியைத் தெரிவுசெய்து புள்ளடியிடுக.**

(5 x 2 = 10)



(அ)



(ஆ)



(இ)



(ஈ)



(உ)

23. பரதன் இராமனின் பாதுகையைப் பெற்று அயோத்திக்குத் திரும்பினான்.

24. குகனின் உதவியுடன் இராமன் கங்கை நதியைக் கடந்தான்.

25. இராமன் சீதையை மீட்பதற்காக இராவணனுடன் போரிட்டான்.

26. இராமன் வில்லை முறித்துச் சீதையை மணந்தான்.

27. இராவணன் சீதையை இலங்கைக்குக் கடத்திச் சென்றான்.

**பின்வரும் பாடலை வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**

(5 x 2 = 10)

## தோட்டம் வளர்ப்போம் !




தோட்டம் போடலாம்
சின்ன சின்ன பாத்திகள் கட்டி
தோட்டம் வளர்ப்போம் நம் வீட்டில்
பச்சை பச்சை காய்கறிகள்
தினமும் பறித்தே சமைத்திடலாம்
மிச்சம் இருக்கும் காய்கறிகள்
அருகில் வசிக்கும் நண்பர்க்கு
அன்பாய் கொடுத்து உதவிடலாம்

வீரிய உரங்கள் சேர்க்காமல்
இயற்கை உரங்களை சேர்த்து விட்டால்
இன்னும் சிறப்பாய் பயிர் விளையும்
இப்படி விளையும் காய்கறியால்
வீட்டு செலவை சேமிக்கலாம்
பெற்றோரிடமும் நற் பெயர் வாங்கிடலாம்
இன்றே இதனை தொடங்கிடுவீர்
அன்பு குட்டிச் செல்வங்களே !



28. மேலே கூறப்பட்ட பாடல் எதனைப்பற்றியது ?

(அ) கல்வியைப் பற்றியது.
(ஆ) வீட்டுத்தோட்டம் பற்றியது.
(இ) குடும்பத்தைப் பற்றியது.
(ஈ) தமிழைப் பற்றியது.

29. கீழே கொடுக்கப்பட்ட விடைகளில் காய்கறிகள் அல்லாதது ?

(அ) பச்சை மிளகாய்.
(ஆ) கத்தரிக்காய்.
(இ) வெண்டிக்காய்.
(ஈ) மாம்பழம்.

30. இப்பாடலில் எத்தகைய உரங்களைச் சேர்ப்பதால் மிகவும் சிறந்த பயனைப் பெறலாம் எனக் கூறப்படுகின்றது?

(அ) செயற்கையான உரங்களைச் சேர்ப்பதால் மிகவும் சிறந்த பயனைப் பெறலாம்.

(ஆ) எந்த விதமான உரங்களும் தேவையில்லை.

(இ) இயற்கையான உரங்களைச் சேர்ப்பதால் மிகவும் சிறந்த பயனைப் பெறலாம்.

(ஈ) இப்பாடலில் உரங்களைப் பற்றி எதுவும் கூறப்படவில்லை.

31. வீட்டுத்தோட்டம் செய்வதால் அடையும் பயன்கள் எவையெனப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(அ) பச்சைக் காய்கறிகள் தினமும் பறித்து சமைத்திடலாம்.

(ஆ) அருகில் வசிக்கும் நண்பர்க்கு அன்பாய்க் கொடுத்து உதவிடலாம்.

(இ) வீட்டு செலவைச் சேமித்துச் பெற்றோரிடமும் நற்பெயர் வாங்கிடலாம்.

(இ) மேலே கூறிய அனைத்து பயன்களையும் அடையலாம்.

32. மேலே தரப்பட்ட பாடலில் எதனை இன்றே தொடங்குமாறு கூறப்பட்டுள்ளது ?

(அ) வீட்டுத்தோட்டத்தை. (ஆ) சமைப்பதை.

(இ) வீட்டு செலவை சேமிப்பதை. (ஈ) பெற்றோரிடம் நல்ல பெயரை வாங்குவதை

**கீழ்வரும் வினாக்களுக்கு தடித்த எழுத்துக்களில் கோடிட்டு இருக்கும் சொற்களில் பொருத்தமானதைத் தெரிவு செய்க.**

(5 x 2 = 10)

அடர்ந்து உயர்ந்த ஆலமரம் ஒன்று 33. (அ) **பென்னம்பெரிய** (ஆ) **சின்னஞ்சிறிய** நாணற்புற்களைப் பார்த்து, அற்பப்புற்களே! என்று ஏளனமாகச் சிரித்தது. நானே பெரியவன் என்று நினைத்துச் செருக்குக் கொண்டது. "ஓ! நாணற்புற்களே, ஆற்றிலே 34. (அ) **வெள்ளம்** (ஆ) **வெல்லம்** பெருகும்போது நீங்கள் பயந்து தலைசாய்க்கிறீர்கள்; காற்று வீசும்போது அச்சத்துடன அங்குமிங்கும் சாய்கிறீர்கள். என்னைப்போல் வீரத்தோடு புயலை எதிர்த்து நின்றால் என்ன?" என்று கூறி மிடுக்குடன் நிமிர்ந்து நின்றது. அப்போது அப்புற்களில் ஒன்று "பெரியவரே! தங்களிடம் உள்ள 35. (அ) **வலிமை** (ஆ) **வளிமை** எங்களிடம் இல்லை. நாங்கள் 36. (அ) **பனிந்து** (ஆ) **பணிந்து** நடந்து வாழ்வதால் என்றும் நிலைத்து நிற்கிறோம்" என்று 37. (அ) **அடக்கத்தோடு** (ஆ) **அடக்கத்தை** கூறியது. அன்று இரவு வீசிய புயற்காற்றுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தலைக்கனம் கொணட் ஆலமரம் சரிந்து விழுந்தது. பணிவுடன் நின்ற நாணற்புற்கள் நிமிர்ந்து நின்றன.

'அடக்கம் உயர்வைத் தரும்'

**கீழ்வரும் வினாக்களுக்கு பொருத்தமான சரியான சொற்களை தெரிவுசெய்க.**

(5 x 2= 10)

| | |
|---|---|
| 38. கடவுள் | அ. புதுமை + ஆண்டு |
| 39. கருமை + இருள் | ஆ. உயிரினம் |
| 40. புத்தாண்டு | இ. காரிருள் |
| 41. உயிர் + இனம் | ஈ. மூன்று + கோணம் |
| 42. முக்கோணம் | உ. இறைவன் |

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.**

(4 x 2 = 8)

(அ) என்நோற்றான் கொல்லெனும் சொல். (ஆ) சிலையில் எழுத்து.

(இ) முன்னறி தெய்வம். (ஈ) சான்றோன் எனக்கேட்ட தாய்.

43. இளமையிற் கல்வி ....................................................................................................................

44. அன்னையும் பிதாவும் ...........................................................................................................

45. ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் ..........................................................................

46. மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்தந்தை ..............................................................................

**கீழே தரப்பட்டுள்ளவற்றில் ஒன்றைப் பற்றி 4 வசனங்கள் எழுதுக**

(4 x 2 = 8)

1. சுத்தம் பேணுதல் 2. தமிழர் திருநாள்

3. இயற்கை அழிவு

47. (அ)..........................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

(ஆ) ..........................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

(இ) ..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

(ஈ)..................................................................................................................................................

..................................................................................................................................................

..................................................................................................................................................

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW Federation of Tamil Schools Inc.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2020